RNI-N0: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை மலர்-4 5 இதழ்- 269 அக்டோபர் 3, 2026 சனிக்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.5

# மதுராந்தகம் தொகுதியில் முதல்-அமைச்சர் விஜய் “ரோடு ஷோ”

## வழிநெடுக மலர் தூவி பொதுமக்கள் உற்சாக வரவேற்பு

சென்னை, அக்.3-

மதுராந்தகம் இடைத்தேர்தலுக்காக மாமண்டூர் பகுதியில் ரோடு ஷோ மேற்கொண்டுள்ள முதல்வர் விஜய்க்கு மலர் தூவி உற்சாக வரவேற்பளித்த பொதுமக்கள்.



மதுராந்தகம், தாராபுரம் ஆகிய தொகுதிகளுக்கு அக்டோபர் 6-ந்தேதி இடைத்தேர்தல் நடக்கிறது. மதுராந்தகம் தொகுதியில் போட்டியிடும் த.வெ.க. வேட்பாளர் மரகதம் குமரவேலை ஆதரித்து முதல்-அமைச்சர் விஜய் கடந்த 25-ந்தேதி. வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். தொடர்ந்து தாராபுரம் தொகுதியில், வேட்பாளர் சத்தியபாமாவை ஆதரித்து அவர் பிரசாரம் செய்தார்.

இந்தநிலையில், 2-வது முறையாக மதுராந்தகம் தொகுதியில் முதல்-அமைச்சர் விஜய் பிரசாரம் மேற்கொள்கிறார். இந்தமுறை மேடை இல்லாமல், ரோடு ஷோ மூலம் மக்களை சந்தித்து ஆதரவு திரட்ட இருக்கிறார்.

மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டப்பேரவை இடைத்தேர்தலுக்கான பிரசாரம் இறுதி கட்டத்தை எட்டியிருக்கும் நிலையில்,

செங்கல்பட்டு மாவட்டம், மாமண்டூரில் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் சாலைவலத்தை முதல்-அமைச்சர் விஜய் தொடங்கினார். வழிநெடுகிலும் முதல்-அமைச்சர் விஜய்க்கு பிரம்மாண்ட வரவேற்பு அளிக்கப்பட்டு வருகின்றது. பொதுமக்கள் பூக்கள் தூவி உற்சாக வரவேற்பு அளித்து வருகின்றனர்.

பிரசார வாகனத்தில் மதுராந்தகம் தவெக வேட்பாளர் மரகதம் குமாரவேலுடன் நின்றபடி, அவருக்கு ஆதரவாக வாக்கு சேகரித்து வருகிறார்.

மாமண்டூரில் தொடங்கி மதுராந்தகம் வரை சுமார் 35 சந்திப்புகளில் பிரசார வாகனத்தில் நின்றபடி, தொண்டர்களின் வரவேற்பை ஏற்று முதல்-அமைச்சர் விஜய் வாக்கு சேகரிக்கிறார்.

சுமார் 35 கிராமங்கள் வழியாக சென்ற முதல்-அமைச்சர் விஜய்

மாமண்டூர்
புக்கத்துறை சந்திப்பு
படாளம் சந்திப்பு
ஜானகிபுரம் சந்திப்பு
மேலவலம்பேட்டை சந்திப்பு,
கருங்குழி சந்திப்பு,
கருங்குழி பேரூராட்சி அலுவலகம்,
மதுராந்தகம் வடக்கு புறவழிச்சாலை நுழைவு,
மதுராந்தகம் தெற்கு புறவழிச்சாலை,
அய்யனார் கோவில் சந்திப்பு,
மோச்சேரி,
தண்டலம்,
பெரும்பாக்கம்,
கிளியாநகர்,
செம்பூண்டி,
கீழாமூர்,
பசுவங்கரணை,
ராமாபுரம்,
மோகல்வாடி,
எலப்பாக்கம்,
பொற்பணங்கரணை,
அணைக்குன்றம்,
கீழ்அத்திவாக்கம்,
மின்னல் சித்தாமூர்,
பெரும்பேர்கண்டிகை,
கடமலைப்புத்தூர்,
தென்பாக்கம் சந்திப்பு,
சோத்துப்பாக்கம்,
மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி கோவில் சந்திப்பு,
சரவம்பாக்கம்,
பெருவெளி,
முதுகரை,
வில்லவராயநல்லூர்,
மாம்பாக்கம்,
மதுராந்தகம்

சாலை வலத்தின்போது மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீடத்துக்குச் சென்று முதல்-அமைச்சர் விஜய் தரிசனம் செய்தார்.

மதுராந்தகம் ரோடு ஷோவில் முதலமைச்சர் விஜய்க்கு தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்த போது, முதல்-அமைச்சர் விஜய் மற்றும் அவரது மகன் ஜேசன் சஞ்சயுடன் இருக்கும் புகைப்படத்தை ஒருவர் நினைவுப் பரிசாக வழங்கினார்.

மதுராந்தகம் ரோடு ஷோவில் முதல்-அமைச்சர் விஜய்க்கு தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். அப்போது, கூட்டத்தில் இருந்த ஒருவர் அவருக்கு நெற்பணிகளை நினைவுப் பரிசாக வழங்கினார்.

கப்பு முக்கியம் பிகிலு!

மதுராந்தகம் இடைத்தேர்தலுக்காக தண்டலம் பகுதியில் ரோடு ஷோ மேற்கொண்டுள்ள முதல்வர் விஜய்க்கு தொண்டர் ஒருவர் வெற்றிக்கோப்பையை பரிசாக அளித்தார்.

மதுராந்தகம் தொகுதியில் நடைபெற்ற ரோடு ஷோவில் பங்கேற்ற முதல்-அமைச்சர் விஜய்க்கு தொண்டர்கள் பாய் வழங்கினர்.

தேநீர் கடையில் விஜய் வாக்குசேகரிப்பு

மதுராந்தகம் எல். எண்டத்தூர் பகுதியில் ரோடு ஷோவில் ஈடுபட்டிருந்த முதல்வர் விஜய், சாலையோர தேநீர் கடையில் தேநீர் அருந்தி பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தார்.

மதுராந்தகம் எல். எண்டத்தூர் பகுதியில் ரோடு ஷோவில் ஈடுபட்டிருந்த முதல்வர் விஜய், அங்கு வயலில் வேலைசெய்த பெண்களிடம் கலந்துரையாடினார்

டிராக்டர் ஓட்டி முதல்-அமைச்சர் விஜய் வாக்கு சேகரிப்பு

இடைத்தேர்தல் நடைபெறும் மதுராந்தகம் தொகுதியில் டிராக்டர் ஓட்டி வாக்கு சேகரித்த முதல்-அமைச்சர் விஜய்.

# அரசு ஊழியர்களை போல கோவில் பெண் ஊழியர்களுக்கு ஜாக்பாட்!

## 12 மாத சம்பளத்துடன் லீவு.. தமிழக அரசு சூப்பர்

சென்னை: அக்.3-

தமிழகத்தில் அரசு பெண் ஊழியர்களுக்கு வழங்கப்படும் மகப்பேறு விடுப்பு சலுகை, இப்போது கோவில்களில் பணிபுரியும் பெண் ஊழியர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது... இதுவரை 9 மாதங்களாக இருந்த மகப்பேறு விடுப்பு, இனிமேல் 12 மாதங்களாக உயர்த்தப்பட்டுள்ளது. அதாவது, ஒரு வருடம் முழுவதும் சம்பளத்துடன் கூடிய விடுப்பு கிடைக்கப் போகிறது. அதை பற்றி இங்கே விரிவாக பார்ப்போம்...!!




தமிழ்நாடு முழுவதும் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் ஆயிரக்கணக்கான கோவில்கள், மடங்கள் மற்றும் அறக்கட்டளைகள் செயல்பட்டு வருகின்றன.

மொத்தம் சுமார் 46,341 கோவில்கள் மற்றும் மத நிறுவனங்கள் இந்தத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன. இதில் 43,677 கோவில்கள், 24 சமணக் கோவில்கள், 45 மடங்கள், மடங்களுக்கு சொந்தமான 81 கோவில்கள் உள்ளிட்டவை அடங்கும்.

இந்தக் கோவில்களில் ஆயிரக்கணக்கான பெண் ஊழியர்கள் பல்வேறு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். கோவில் நிர்வாகம், அலுவலகப் பணிகள் எனப் பல்வேறு பொறுப்புகளில் இருக்கும் இவர்களின் குடும்ப நலனைக் கருத்தில் கொண்டு தமிழக அரசு இந்த முக்கிய முடிவை எடுத்துள்ளது. இதுவரை தமிழக அரசு பெண் ஊழியர்களுக்கு வழங்கி வந்த மகப்பேறு விடுப்பு சலுகை, திருமணமான பெண் ஊழியர்களுக்கு இரண்டு குழந்தைகள் வரை பொருந்தும். அதன்படி, 12 மாதங்கள் முழுச் சம்பளத்துடன் விடுப்பு வழங்கப்படுகிறது. இதே சலுகையைத் திருக்கோவில்களில் பணிபுரியும் பெண் ஊழியர்களுக்கும் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து வந்தது.

இந்நிலையில், அந்தக் கோரிக்கையை ஏற்று, கோவில் பெண் ஊழியர்களுக்கும் 9 மாதங்களாக இருந்த மகப்பேறு விடுப்பை 12 மாதங்களாக உயர்த்தி தமிழக அரசு இப்போது அதிரடியாக அறிவித்திருக்கிறது.. இதனால் குழந்தை பிறந்த பிறகு தாய்மார்களுக்கு குழந்தையை பார்த்துக்கொள்ள கூடுதல் அவகாசம் கிடைக்கும்... அதுவும் சம்பள இழப்பு இல்லாமல் ஒரு வருடம் விடுப்பு கிடைப்பது அவர்களுக்கு மிக மிக முக்கியமான சலுகையாக இருக்கும். அதுமட்டுமல்லாமல், ஓய்வுபெறும் கோவில் ஊழியர்களுக்கும் தமிழக அரசு இன்னொரு சர்ப்ரைஸ் சலுகையை அறிவித்துள்ளது. பொதுவாக, ஊழியர்கள் பணியில் இருக்கும்போது பயன்படுத்தாமல் சேர்த்து வைத்திருக்கும் ஈட்டிய விடுப்பை, ஓய்வுபெறும்போது பணமாக பெற்றுக்கொள்ள முடியும்.

இதுவரை கோவில் ஊழியர்கள் அதிகபட்சமாக 210 நாட்களுக்கான ஈட்டிய விடுப்பை மட்டுமே பணமாகப் பெற்றுக்கொள்ள முடிந்தது. ஆனால் இப்போது அந்த உச்சவரம்பு 240 நாட்களாக உயர்த்தப்பட்டுள்ளது... இதன் மூலம் ஓய்வுபெறும் ஊழியர்கள் கூடுதலாக 30 நாட்களுக்கான விடுப்புப் பணத்தைப் பெற முடியும். தமிழக அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் அதே அளவிலான சலுகை இனி கோவில் ஊழியர்களுக்கும் கிடைக்கும். இந்த 2 அறிவிப்புகளையும் நடைமுறைப்படுத்துவதற்காக, இந்து சமய நிறுவனங்களின் பணியாளர் (பணி நிபந்தனைகள்) விதிகள், 2020-ல் உரிய திருத்தங்கள் செய்யப்பட்டு அரசாணையும் வெளியிடப்பட்டுள்ளது. இந்து சமய அறநிலையத்துறை வெளியிட்ட செய்திக்குறிப்பில் உள்ளதாவது: "இந்து சமய நிறுவனங்களின் பணியாளர் (பணி நிபந்தனைகள்) விதிகள் 2020-ல் உரியதிருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்மூலம் ஓய்வு பெறும் கோயில் பணியாளர்கள், அரசு ஊழியர்களுக்கு இணையாக தங்களது ஈட்டிய விடுப்பை அதிகபட்சமாக 240 நாட்கள் வரை ஒப்படைத்து, அதற்குரிய பணப்பலனைப் பெறும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கோயில்களில் பணிபுரியும் பெண் பணியாளர்கள், அரசு ஊழியர்களுக்கு இணையாக 12 மாத மகப்பேறு விடுப்பினை பெற்று பயனடையவழிவகை செய்யப்பட்டுள்ளது. கோயில் பணியாளர்களின் பணிநலன், குடும்ப நலன், சமூகப் பாதுகாப்பை மேம்படுத்தும் வகையில் இரு முக்கிய கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன" என்று கூறப்பட்டுள்ளது. ஆக, ஒருபக்கம் குழந்தையை வளர்க்கும் காலத்தில் பெண்களுக்கு நிம்மதி அளிக்கும் மகப்பேறு விடுப்பு உயர்வு, இன்னொருபக்கம் ஓய்வுபெறும்போது கூடுதல் பணப்பலன்... இப்படி கோவில் ஊழியர்களின் குடும்ப நலனையும் ஓய்வுக்காலப் பாதுகாப்பையும் கருத்தில் கொண்டு தமிழக அரசு இந்த டபுள் நடவடிக்கைகளை எடுத்துள்ளது... ஆயிரக்கணக்கான ஊழியர்களுக்கு இந்த அறிவிப்புகள் பயனளிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

# 100 சார்பதிவாளர் அலுவலகங்கள் இனி சனிக்கிழமைகளில் செயல்படாது

சென்னை, அக்.3-

100 சார்பதிவாளர் அலுவலகங்களில் சனிக்கிழமை பணி ரத்து செய்யப்படுவதாக தமிழ்நாடு அரசு இன்று அரசாணை வெளியிட்டுள்ளது.

வேலைப் பளு

வருகையில்லா ஆவணப்பதிவு விரிவாக்கம் செய்யப்பட உள்ளதால், சார்பதிவாளர்களின் வேலைப் பளுவை குறைக்கும் நோக்கில், சனிக்கிழமைகளில் செயல்படும் 100 சார்பதிவாளர் அலுவலகங்கள் இனி வார நாட்களில் மட்டும் செயல்படும் எனவும், சனிக்கிழமை கட்டாயப்பணி முறை கைவிடப்படும் எனவும் தமிழக சட்டசபையில் அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்தது.

வார நாட்களில் மட்டும்

இந்நிலையில் 100 சார்பதிவாளர் அலுவலகங்களில் சனிக்கிழமை பணி ரத்து செய்யப்படுவதாகவும், வருகையில்லா ஆவணப்பதிவு விரிவாக்கம் செய்யப்படுவதால் சனிக்கிழமை விடுமுறை அளிக்கப்படுவதாகவும், 100 சார் பதிவாளர் அலுவலகங்களும் இனி வார நாட்களில் மட்டும் செயல்படும் என்றும், சார்பதிவாளர்களின் பணிச்சுமையை குறைக்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் லோகேஷ்

கடந்த திமுக ஆட்சியில் சனிக்கிழமைகளில் 100 சார்பதிவாளர் அலுவலகங்கள் செயல்படும் என அறிவிக்கப்பட்டது. இந்நிலையில் தற்போது 100 சார்பதிவாளர் அலுவலகங்களில் இருந்த சனிக்கிழமை கட்டாயப் பணி கைவிடப்படுகிறது. இது குறித்து சட்டப்பேரவையில் அமைச்சர் லோகேஷ் தமிழ்செல்வன் அறிவித்த நிலையில் இன்று அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

எங்கிருந்தும் பதிவு

கடந்த தமிழ்நாடு சட்டமன்றத்தில் மானிய கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டு விவாதம் நடத்தப்பட்டபோது, வணிக வரி மற்றும் பதிவுத்துறை தொடர்பான முக்கிய அறிவிப்புகள் வெளியிடப்பட்டது.

இதன்படி வருகையில்லா ஆவணப் பதிவு விரிவாக்கம் செய்யப்பட உள்ளதால், சார்பதிவாளர்களின் வேலைப் பளுவைக் குறைக்கும் நோக்கில், சனிக்கிழமைகளில் செயல்படும் 100 சார்பதிவாளர் அலுவலகங்கள் இனி வார நாட்களில் மட்டும் செயல்படும், சனிக்கிழமை கட்டாயப்பணி முறை கைவிடப்படும்.

பதிவுத்துறை "எங்கிருந்தும் பதிவு" என்னும் குறிக்கோளை நோக்கி முன்நகர்கிறது. சார்பதிவாளர்கள் ஆவணப் பதிவு மட்டுமின்றி, பல்வேறு கூடுதல் நிர்வாகப் பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

சனிக்கிழமைகளிலும் தொடர்ந்து ஆவணப் பதிவு மேற்கொள்வதால் அலுவலகப் பணிகளில் பின்னடைவு ஏற்படுகிறது. வருங்காலங்களில் அனைத்து ஆவணங்களும் வருகையில்லா பதிவு மற்றும் காகிதமில்லா முறையில் பதிவுக்கு அனுமதிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதால், சார்பதிவாளர்களால் பொதுமக்களுக்கு வழங்கப்படும் பதிவுச் சேவைகளின் தரத்தில் எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் 100 சார்பதிவாளர் தற்போது அலுவலகங்களில் நடைமுறையில் உள்ள சனிக்கிழமை கட்டாயப்பணி முறையானது கைவிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

present sale for
all over Tamil Nadu

தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது



## காரைக்குடியில் காந்தி பிறந்தநாள் காமராஜர் நினைவு தினம் We The Leaders சார்பில் இருபெரும் தலைவர்களுக்கு மரியாதை

காரைக்குடி, அக்.03–

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் தேசத் தந்தை மகாத்மா காந்தியடிகளின் பிறந்தநாள் மற்றும் பெருந்தலைவர் காமராஜரின் நினைவு தினத்தை முன்னிட்டு, We The Leaders காரைக்குடி சார்பில் இருபெரும் தலைவர்களுக்கும் மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடை பெற்றது. காரைக்குடி மகர் நோன்புத் திடலில் தன்னார்வ லர்கள் சிவகுமார், விநாயகம் ஆகியோரின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மகாத்மா காந்தி மற்றும் பெருந்தலைவர் காமராஜர் ஆகியோருக்கு மரியாதை செலுத்தப்பட்டது.

இதில் முருகு சரவணன், முத்து கணேஷ், துரை, நிரேஷ், வழக்கறிஞர் கிருத்தி ரச்சயா, டாக்டர் ஜோதி சித்தார்த்தா, சபரி, முத்துலக்ஷ்மணன், பாலன், தினேஷ் குமார், மெய்யப்பன், செல்லப்பாண்டியன் (ஓய்வு பெற்ற எஸ்.ஐ.), சண்முகநாதன் (ஓய்வு பெற்ற எஸ்.ஐ.), சேகர் (ஓய்வு பெற்ற எஸ்.ஐ.) உள்ளிட்ட தன்னார்வலர்கள் பலர் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.

## தாம்பரம் தெற்கு பகுதி தேமுதிக சார்பில் காமராஜர் நினைவு நாளை முன்னிட்டு திருவுருவ சிலைக்கு மரியாதை செலுத்தப்பட்டது



தாம்பரம், அக்.03–

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் தெற்கு பகுதி தேமுதிக சார்பில் தேமுதிக மாவட்டச் செயலாளர் அனகை முருகேசன் அறிவுத்தலின்படி மாவட்ட துணைச் செயலாளர் மா.செழியன் அவர்களின் ஆலோசனைப்படி தாம்பரம் தெற்கு பகுதி தேமுதிக பகுதி செயலாளர் கேட்.எம்.தர்மா தலைமையில் தாம்பரம் மேற்கு பகுதி செயலாளர் மார்க்கெட் ஞானப்பால் முன்னிலையில் காமராஜர் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது

இந்த நிகழ்ச்சியில் தெற்கு பொருளாளர், வி.எஸ்.லேகநாதன், மேற்கு பகுதி பொருளாளர் ஜார்ஜ், செங்கல்பட்டு மாவட்ட வழக்கறிஞர் துணைச் செயலாளர் சுஜாதா நந்தினி மாவட்ட மகளிர் அணி நிர்வாகி கலா ஆறுமுகம் தெற்கு பகுதி கழகத் துணைச் செயலாளர் ஏழுமலை தெற்கு பகுதி துணை செயலாளர் ஐ.கே. தர்மா, மாவட்ட பிரதிநிதி பாலமுருகன் தெற்கு பகுதி கேப்டன் மன்ற செயலாளர் நெரும்பூர் டாக்டர் ராஜேந்திரன், மேற்கு பகுதி துணை செயலாளர் பத்மா, பகுதி துணை செயலாளர் பழனிவேல், கேப்டன் மன்ற துணை செயலாளர் நைனார் முகமது 62வது வட்டக் கழக செயலாளர் குமார், 57வது வட்ட செயலாளர் ராஜேஷ், 49வது வார்டு அவை தலைவர் நிஷாந்த் மற்றும் தேமுதிக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு திருவருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.



## திருவள்ளூர் மாவட்டம், வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட வெள்ளனூர் ஊராட்சியில் காந்தி ஜெயந்தியை முன்னிட்டு கிராம சபை கூட்டம்

திருவள்ளூர், அக்.03–

திருவள்ளூர் மாவட்டம், வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட வெள்ளனூர் ஊராட்சியில் காந்தி ஜெயந்தியை முன்னிட்டு கிராம சபை கூட்டம் கொள்ளுமேடு சமுதாய நலக்கூடத்தில் நடைபெற்றது, கிராம சபை கூட்டத்தில் கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொது நிதி செலவினம், தூய்மையான குடிநீர் விநியோகித்தினை உறுதி செய்வது, பாரதம் கிராம வேலை உறுதி மற்றும் வாழ்வாதாரத் திட்டம், சிறுபாசன குளங்கள், ஏரிகள், புதுப்பித்தல், ஜல் ஜீவன் திட்டம் மற்றும் இதர பொருட்கள் குறித்து விவாதித்தல் நடைபெற்றது, மேற்கண்ட பொருட்கள் சம்பந்தமாகவும் கிராம ஊராட்சியின் வளர்ச்சியின் அவசியத்தை கருத்தில் கொண்டு வளர்ச்சிக்காக மக்களால் கொண்டு வரப்படும் சிறப்பு தீர்மானங்களையும் ஆலோசித்து விவாதித்து தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்பதால் அனைத்து தரப்பு பொதுமக்கள் அரசியல் கட்சி பிரமுகர்கள், பொது நல சங்க நிர்வாகிகள், வியாபார சங்க நிர்வாகிகள், அனைத்து துறை சார்ந்த அலுவலர்கள், இளைஞர்கள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழு அங்கத்தினர்களும் வருகை தந்து கூட்டத்தில் கலந்து கொண்டனர், இந்நிகழ்ச்சியில் வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர், கிராம நிர்வாக அலுவலர், ஊராட்சி செயல் அலுவலர் மற்றும் அரசு அதிகாரிகள் அலுவலர்கள் கலந்து கொண்டு மக்களின் குறைகளை கேட்டு அறிந்து நிறைவேற்றி தருவதாக உறுதியளித்தனர்.

## புள்ளானேரி கிராம ஊராட்சியில் மாவட்ட ஆட்சியர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் பங்கேற்ற காந்தி ஜெயந்தி சிறப்பு கிராம சபை கூட்டம்





திருப்பத்தூர், அக்.03–

உத்தமர் காந்தியடிகளின் 158–ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட புள்ளானேரி கிராம ஊராட்சியில் காந்தி ஜெயந்தி சிறப்பு கிராம சபை கூட்டம் நடைபெற்றது.

இச்சிறப்பு கூட்டத்தில், திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் வே. நல்லசிவன், இ.ஆ.ப. மற்றும் ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் கே.சி.வீரமணி சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில், ஊராட்சியின் வளர்ச்சிப் பணிகள், குடிநீர் விநியோகம், சுகாதாரப் பராமரிப்பு, மகளிர்க்கான சுய உதவிக் குழுத் திட்டங்கள், கால்நடைப் பராமரிப்பு, வேளாண்மை மேம்பாடு மற்றும் மாவட்ட தொழில் மையத்தின் மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு அரசு நலத்திட்டங்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டன. மேலும், பொதுமக்கள் அளித்த கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு, அவற்றின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் முக்கியத் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்:

செள.தமிழரசி திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, விஜயகுமாரி திட்ட இயக்குநர், மகளிர் திட்டம் மரு. இளவரசன் மண்டல இணை இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை மணி இணை இயக்குநர், வேளாண்மைத்துறை, வரதராஜன் வருவாய் கோட்டாட்சியர், திருப்பத்தூர் முருகன் உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) மரு.நா.கலு சிவலிங்கம் மாவட்ட சுகாதார அலுவலர், ராமமூர்த்தி பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம், சங்கர் தணிகாசலம் தலைவர், புள்ளானேரி ஊராட்சி மன்றம், மேலும், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் கிராம பொதுமக்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டு கிராம சபை கூட்டத்தினை சிறப்பித்தனர்.





## காந்தி ஜெயந்தியை முன்னிட்டு கிராம சபை கூட்டம்

திருவள்ளூர், அக்.03–

திருவள்ளூர் மாவட்டம், வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட மோரை ஊராட்சியில் காந்தி ஜெயந்தியை முன்னிட்டு கிராம சபை கூட்டம் நடைபெற்றது, கிராம சபை கூட்டத்தில் கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொது நிதி செலவினம், தூய்மையான குடிநீர் விநியோகித்தினை உறுதி செய்வது, பாரதம் கிராம வேலை உறுதி மற்றும் வாழ்வாதாரத் திட்டம், சிறுபாசன குளங்கள், ஏரிகள், புதுப்பித்தல், ஜல் ஜீவன் திட்டம் மற்றும் இதர பொருட்கள் குறித்து விவாதித்தல் நடைபெற்றது, மேற்கண்ட பொருட்கள் சம்பந்தமாகவும் கிராம ஊராட்சியின் வளர்ச்சியின் அவசியத்தை கருத்தில் கொண்டு வளர்ச்சிக்காக மக்களால் கொண்டு வரப்படும் சிறப்பு தீர்மானங்களையும் ஆலோசித்து விவாதித்து தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்பதால் அனைத்து தரப்பு பொதுமக்கள் அரசியல் கட்சி பிரமுகர்கள், பொது நல சங்க நிர்வாகிகள், வியாபார சங்க நிர்வாகிகள், அனைத்து துறை சார்ந்த அலுவலர்கள், இளைஞர்கள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழு அங்கத்தினர்களும் வருகை தந்து கூட்டத்தில் கலந்து கொண்டனர், இந்நிகழ்ச்சியில் வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர், கிராம நிர்வாக அலுவலர், ஊராட்சி செயல் அலுவலர் மற்றும் அரசு அதிகாரிகள் அலுவலர்கள் கலந்து கொண்டு மக்களின் குறைகளை கேட்டு அறிந்து நிறைவேற்றி தருவதாக உறுதியளித்தனர்.



■ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் (02.10.2026) அன்று சென்னை கோயம்பேடு புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர்.பேருந்து நிலையத்தில், வெற்றிப் பயணம் திட்டத்தை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் நகராட்சிக்குட்பட்ட புதிய பேருந்து நிலையத்தில், வெற்றி பயணம் திட்டத்தின் கீழ் இயக்கப்படவுள்ள பேருந்துகளை மாவட்ட ஆட்சியர் வே.நல்லசிவன்,இ.ஆ.ப., கொடியசைத்து தொடங்கி வைத்தார். உடன் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தின் வேலூர் மண்டல துணை மேலாளர் (தொழில்நுட்பம்) R.ஸ்ரீனிவாசன், திருப்பத்தூர் த.அ.போ.க.(லி) கிளை மேலாளர் K.வெங்கடேசன், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் சுபாஷ் சந்திரபோஸ், திருப்பத்தூர் வட்டாட்சியர் நவநீதன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



■ தமிழ்நாடு முதலமைச்சர் ச. ஜோசப் விஜய் சென்னை கோயம்பேடு, புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் பேருந்து நிலைய வளாகத்தில் வெற்றிப் பயணம் திட்டத்தினை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, நீலகிரி மாவட்டம், உதகை பேருந்து நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு கலந்து கொண்டார்.

## விளாத்திகுளம் மாணவி கொலை வழக்கு – தூக்கு தண்டனைக்கு எதிரான மனு தீர்ப்புக்காக ஒத்திவைப்பு

மதுரை, அக்.03–

விளாத்திகுளம் அருகே பிளஸ் 2 மாணவியை பாலியல் வன்கொடுமைக்குள்ளாக்கி கொலை செய்த வழக்கில் தர்ம முனீஸ்வரன் என்பவருக்கு வழங்கப்பட்ட தூக்கு தண்டனைக்கு எதிராக தாக்கல் செய்த மேல்முறையீடு மனு மீதான தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் குளத்தூர் அருகே வேடநத்தம் கிராமத்தைச் சேர்ந்த கூலித் தொழிலாளியின் 17 வயது மகள் அங்குள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் பிளஸ் 2 படித்துவந்தார்.

கடந்த மார்ச் 10–ம் தேதி இரவு வீட்டை விட்டு வெளியே சென்றவர் மீண்டும் வீடு திரும்பவில்லை. மறுநாள் கிராமத்துக்கு அருகே உள்ள காட்டுப்பகுதியில் சடலமாக மீட்கப்பட்டார்.

மாணவியை கொலை செய்தவர்களை கைது செய்ய வலியுறுத்தி, கிராம மக்கள் உட்பட பல்வேறு அமைப்புகள், கட்சியினர் மறியல் போராட்டம் நடத்தினர். போலீஸார் 10 தனிப்படைகள் அமைத்து தேடுதல் பணியில் ஈடுபட்டனர். இதில், ராமநாதபுரம் மாவட்டம் சாயல்குடி மாரியம்மன் கோயில் தெருவைச் சேர்ந்த மாவீரன் என்ற தர்ம முனீஸ்வரன் (37) என்பவரை மார்ச் 19–ம் தேதி பிடித்து விசாரணை நடத்தினர்.

மாணவியை பலா த்காரம் செய்து கொலை செய்தது அவர்தான் என்பது தெரியவந்தது. இதுதொடர்பான வழக்கு தூத்துக்குடி போக்சோ நீதிமன்றத்தில் நடந்து வந்தது. விசாரணை அதிகாரியான விளாத்திகுளம் டிஎஸ்பி சுந்தரபாண்டியன், சம்பவம் நிகழ்ந்த 20 நாட்களில், மார்ச் 31–ம் தேதி தூத்துக்குடி போக்சோ நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தார்.

நீதிபதி பிரீத்தா முன்பு விசாரணை நடைபெற்றது. 71 சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். 76 நாளில் விசாரணை முடிக்கப்பட்டது. சம்பவம் நடைபெற்று 76வது நாளில், தர்மமுனீஸ்வரனுக்கு கொலை செய்த குற்றத்துக்காக தூக்குதண்டனையும், போக்சோ சட்டத்தின்கீழ் ஒரு தூக்கு தண்டனையும், தடயங்களை மறைக்க முயன்றதற்காக ஓராண்டு சிறையும் தண்டனையை ஏககாலத்தில் அனுபவிக்க வேண்டும் என நீதிபதி மே 26–ல் தீர்ப்பளித்தார்.

இந்நிலையில் தூக்கு தண்டனையை ரத்து செய்யக்கோரி தர்மமுனீஸ்வரன் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மேல்முறையீடு மனுத் தாக்கல் செய்தார். அரசு சார்பில் தூக்கு தண்டனையை நிறைவேற்ற அனுமதி கோரி மனுத்தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுக்களை நீதிபதிகள் ஜெகதீஷ் சந்திரா, முருகேசன் அமர்வு விசாரித்தது.

அரசுத் தரப்பில், அறிவியல் பூர்வமான தடையவியல் ஆய்வுகளின் அடிப்படையிலேயே தர்ம முனீஸ்வரனுக்கு நீதிமன்றம் தண்டனை வழங்கியுள்ளது. தண்டனையை உறுதி செய்ய வேண்டும் எனக் கோரிக்கை வைக்கப்பட்டது. தர்மமுனீஸ்வரன் தரப்பில், மாணவி கொலை வழக்கில் போதிய ஆதாரங்கள் இல்லாமல் தன்னை கைது செய்தாகவும், தூக்கு தண்டனையை ரத்து செய்ய வேண்டும் எனவும் கூறப்பட்டது. அனைத்து தரப்பு வாதங்கள் முடிந்த நிலையில் மேல்முறையீட்டு மனுக்கள் மீதான தீர்ப்பை நீதிபதிகள் தேதி குறிப்பிடாமல் ஒத்திவைத்தனர்.

ஜாமீன் ரத்து: தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட தர்ம முனீஸ்வரன் எட்டயபுரம் அருகே கீழஈரால் பகுதியில் கடந்த 2020–ம் ஆண்டு பிப்.2–ம் தேதி பாப்பா (65) என்ற மூதாட்டியிடம் நகைகளை திருடி பாலியல் துன்புறுத்தல் செய்த வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டார்.

அந்த வழக்கின் தண்டனையை நிறுத்தி வைத்து அவருக்கு உயர் நீதிமன்ற மதுரை அமர்வு நிபந்தனை ஜாமீன் வழங்கியது.

அந்த நிபந்தனை அடிப்படையில் தூத்துக்குடி நீதிமன்றத்தில் கையெழுத்திடச் சென்ற போது தான் பள்ளி மாணவியை பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்துள்ளார். இதையடுத்து அந்த வழக்கில் அவருக்கு வழங்கப்பட்ட ஜாமீன் ரத்து செய்யப்பட்டது.



## காந்தி ஜெயந்தியன்று சட்டவிரோத மது விற்பனை 4 பேர் கைது 273 மதுபாட்டில்கள் பறிமுதல் பழனி தாலுகா போலீசார் அதிரடி நடவடிக்கை

திண்டுக்கல், அக்.03-

திண்டுக்கல் மாவட்டம் பழனி தாலுகா காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பாலசமுத்திரம், பொருந்தலாறு, பாப்பம்பட்டி மற்றும் கோதைமங்கலம் உள்ளிட்ட பகுதிகளில் காந்தி ஜெயந்தியை முன்னிட்டு சட்டவிரோதமாக மதுபானங்கள் விற்பனை செய்யப்படுவதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

இதையடுத்து, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜெயக்குமார் அறிவுறுத்தலின்படியும், பழனி துணை காவல் கண்காணிப்பாளர் தேவராஜ் உத்தரவின்படியும், பழனி தாலுகா காவல் ஆய்வாளர் சத்தியமூர்த்தி தலைமையில் உதவி ஆய்வாளர்கள் ராஜ்குமார், ஆனந்த் மற்றும் காவலர்கள் அடங்கிய தனிப்படை போலீசார் அப்பகுதிகளில் தீவிர ரோந்து மற்றும் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டனர்.

அப்போது பாலசமுத்திரம் பகுதியில் சட்டவிரோதமாக மதுபானங்களை விற்பனை செய்ததாக ராமர், ஜெயராம், ரவிக்குமார் மற்றும் எல்லத்துரை ஆகிய நான்கு பேரை போலீசார் கைது செய்தனர்.

மேலும், அவர்களிடமிருந்து விற்பனைக்காக பதுக்கி வைக்கப்பட்டிருந்த 273 மதுபாட்டில்களை போலீசார் பறிமுதல் செய்தனர்.

இதையடுத்து கைது செய்யப்பட்ட நான்கு பேரிடமும் போலீசார் விசாரணை மேற்கொண்டனர்

தொடர்ந்து, கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போலீசார், சட்டவிரோத மது விற்பனையில் வேறு நபர்களுக்கு தொடர்பு உள்ளதா என்பது குறித்தும் விசாரணை நடத்தி வருகின்றனர்.

காந்தி ஜெயந்தியை முன்னிட்டு மதுபான விற்பனைக்கு தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில், தடையை மீறி சட்டவிரோதமாக மதுபானங்களை விற்பனை செய்ததாக நான்கு பேர் கைது செய்யப்பட்டு, 273 மதுபாட்டில்கள் பறிமுதல் செய்யப்பட்ட சம்பவம் பாலசமுத்திரம் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மேலும், சட்டவிரோதமாக மதுபானங்கள் விற்பனை செய்வோர் மற்றும் பதுக்கி வைப்போர் மீது தொடர்ந்து கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு, சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என போலீசார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.



■ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் சென்னை, கோயம்பேடு, புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர்.பேருந்து நிலையத்தில், போக்குவரத்து துறை சார்பாக, வெற்றிப் பயணம் திட்டத்தின் கீழ், மகளிர் கட்டணமில்லாப் பயணத் திட்டத்தின் விரிவாக்கத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார். அதனைத்தொடர்ந்து, கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையத்தில், வெற்றிப் பயணம் திட்டத்தின் கீழ், மகளிர் கட்டணமில்லாப் பயணத் திட்டத்தின் விரிவாக்கத்திற்கான பேருந்துகளை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார்,கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் முகுந்தன் ஆகியோர் துவக்கி வைத்து, மகளிர்களுக்கு கட்டணமில்லா பேருந்து பயணச்சீட்டுகளை வழங்கினார்கள். உடன், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக பொதுமேலாளர் (சேலம்) கலைவாணன், துணை மேலாளர் முகம்மது கலிமுல்லா (தொழில்நுட்பம்) உள்ளிட்ட பலர் உள்ளனர்.



■ கிருஷ்ணகிரி நகராட்சி அலுவலகத்தில், அண்ணல் காந்தியடிகளின் 158-வது பிறந்தநாளை முன்னிட்டு, அண்ணல் காந்தியடிகளின் திருவுருவ சிலைக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் இன்று (02.10.2026) மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் கிருஷ்ணகிரி நகராட்சி ஆணையாளர் சேகர், செய்தி மக்கள்தொடர்பு அலுவலர் மோகன், வட்டாட்சியர் ராஜலட்சுமி உள்ளிட்ட பலர் உள்ளனர்.



■ நீலகிரி மாவட்டம் உதகை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கூக்கல் ஊராட்சியில், முதல்வரின் சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.4 கோடி மதிப்பில் மசக்கல் முதல் கூக்கல்தொரை வரை முடிக்கப்பட்ட 2.900 கி.மீ சிமெண்ட் சாலை பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

## அண்ணல் காந்தியடிகள் 157 ஆவது பிறந்த நாளைமுன்னிட்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், அண்ணல் காந்தியடிகள் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தி, தீபாவளி கதர் சிறப்பு தள்ளுபடி விற்பனையை தொடங்கி வைத்தார்

அல்லிநகரம், அக்.03-

தேனி-அல்லிநகரம் நகராட்சி காமராஜர் பேருந்து முனையத்தில் செயல்பட்டுவரும் காதிகிராப்ட்அங்காடியில் அண்ணல் காந்தியடிகள் அவர்களின் 157-ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, அன்னாரின் திருவுருவபடத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி குத்துவிளக்கு ஏற்றி வைத்து, தமிழ்நாடு கதர் கிராம தொழில் வாரியத்தின் (காதிகிராப்ட்) சார்பில் தீபாவளி சிறப்பு தள்ளுபடி கதர் விற்பனையை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு. இரா.வைத்திநாதன், தொடங்கி வைத்தார்.இந்திய திருநாட்டின் இதயமாக விளங்கும் கிராமப்புற ஏழை எளிய நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் உயரிய சேவையை முதற்குறிக்கோளாகக் கொண்டு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் செயல்பட்டு



வருகிறது.கடந்த 2025-ஆம் ஆண்டு காந்தி ஜெயந்தி மற்றும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு தேனி மாவட்டத்தில் ரூ.10.75 இலட்சத்திற்கு கதர் ரகங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளதுநடப்பு ஆண்டு (2026) தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, தேனி மாவட்டத்திற்கு ரூ.50 இலட்சம் மதிப்புள்ள கதர் இரகங்களை விற்பனை செய்திட தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தால் விற்பனை இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதுகதர் விற்பனையை ஊக்கப்படுத்துவதற்கும் வாடிக்கையாளர்களின் நலன் கருதி பருத்தி கதர், பாலியஸ்டர் மற்றும் பட்டு ரகங்களுக்கு 30% சிறப்புத் தள்ளுபடி வழங்கப்பட்டுள்ளது. விற்பனை இலக்கினை முழுமையாக எய்திடும் பொருட்டு அனைத்து அரசுஅலுவலர்களுக்கும ஆசிரியப் பெருமக்களுக்கும் மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரிந்துவருகின்ற பணியாளர்களுக்கும் எளிய கடன் வசதிகள் வழங்கப்பட்டு வருகிறது. அரசுப் பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் செயல்படும் அனைத்து கதர் அங்காடிகள் (Khadi Kraft) மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் துவக்கப்பட்டுள்ள தற்காலிக கதர் விற்பனை நிலையங்களில் பெருமளவில் கதர் ரகங்களை வாங்கி, கிராமப்புற ஏழை எளிய நூற்போர்கள் மற்றும் நெய்வோர்களின் வாழ்வில் ஒளியேற்றிட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் .லெ.பாண்டி, காதிகிராப்ட் மேலாளர். ஜோதி, மேற்பார்வையாளர் கண்ணன், நகர்நல அலுவலர் கவிப்ரியா மற்றும் அரசு அலுவலர்கள், கதர் வாரிய பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



■ நீலகிரி மாவட்டம் குன்னூர் உபதலை ஊராட்சிக்கு உட்பட்ட பெரிய பிக்கெட்டி சமுதாய கூடதிற்கு முன்புறம் நடைபெற்ற கிராமசபை கூட்டத்தில் அரத்துறை அலுவலர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

## காமராஜர் நினைவு நாளை முன்னிட்டு பெருங்களத்தூர் காமராஜர் நற்பணி இயக்கம் சார்பில் மாலை அணிவித்து மரியாதை

தாம்பரம், அக்.03-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் காமராஜர் நினைவு நாளை முன்னிட்டு, செங்கல்பட்டு மாவட்டம் மேற்கு தாம்பரம் பகுதியில் அமைந்துள்ள காமராஜர் திருவுருவச் சிலைக்கு, மற்றும் பெருங்களத்தூர் காமராஜர் சிலைக்கு பெருங்களத்தூர் காமராஜர் நற்பணி இயக்கம் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு பெருங்களத்தூர் காமராஜர் நற்பணி இயக்கத்தின் தலைவர் சாமுவேல் தலைமை தாங்கினார். செயலாளர் டைசன் முன்னிலை வகித்தார்.

சிறப்பு அழைப்பாளராக தாம்பரம் மார்க்கெட் ஞானப்பால் கலந்து கொண்டு, காமராஜர் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து, ஜெய், ஜவகர், சஞ்சய், மணிகண்டன் என்கின்ற நந்தா, கௌதம், பிரவீன், சந்தோஷ், கௌதம், பிரகாஷ் உள்ளிட்ட பெருங்களத்தூர் காமராஜர் நற்பணி இயக்கத்தின் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டு காமராஜர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.



நிகழ்ச்சியில் காமராஜரின் சமூகப் பணி, கல்விப் பணி மற்றும் தமிழகத்தின் வளர்ச்சிக்காக அவர் ஆற்றிய பணிகளை நினைவுகூர்ந்து மரியாதை செலுத்தப்பட்டது.



## தாராபுரத்தில் சுகன்யாவுக்கு ஆதரவாக திமுக முதன்மை செயலாளர் கே.என்.நேரு வாக்கு சேகரிப்பு

திருப்பூர், அக்.03-

திருப்பூர் கிழக்கு மாவட்டம், தாராபுரம் தொகுதி பொன்னாபுரம் ஊராட்சியில் 53, 54, 55-வது பூத் பகுதிகளில் திமுக முதன்மைச் செயலாளர் கே.என். நேரு தலைமையில் சுகன்யாவுக்கு ஆதரவாக "சுட்டெரிக்கும் வெயிலில் சூறாவளி பிரச்சாரம்" மேற்கொண்டு உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரிக்கப்பட்டது.

வாவிபாளையம், கள்ளிப்பாளையம், தாசர்பட்டி, கருங்காலிவலசு, நாட்டுக்கல்பாளையம் உள்ளிட்ட பகுதிகள், பொன்னாபுரம் அரண்மனையாளர்களையும் சந்தித்து வாக்கு சேகரித்தனர்.

இதில் பாராளுமன்ற உறுப்பினர்,கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா,கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக செயலாளர், முன்னாள் எம்.எல்.ஏ. மதியழகன், கிருஷ்ணகிரி நகர பொறுப்பாளர்கள் அஸ்லாம், வேலுமணி, முன்னாள் நகர செயலாளர் நவாப், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செங்குட்டுவன்,முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுகவனம்,ஒன்றிய செயலாளர் மகேந்திரன், மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி,சாவித்திரி கடலரசு மூர்த்தி ஆகியோர் பங்கேற்றனர்.

மேலும் மாநில விவசாய அணி டேம் வெங்கடேசன், லயோலா ராஜசேகர் உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் கட்சியினர் உடனிருந்தனர்.




## எம்.ஜி.ஆர் பல்கலைக்கழகத்தின் 36-வது பட்டமளிப்பு விழா: 4,200 மாணவ, மாணவிகளுக்குப் பட்டங்கள் வழங்கல்

எம்.ஜி.ஆர் பல்கலைக்கழகத்தின் 36-வது பட்டமளிப்பு விழா: 4,200 மாணவ, மாணவிகளுக்குப் பட்டங்கள் வழங்கல் ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் சிறப்பு விருந்தினராகக் பங்கேற்று மாணவிகளுக்குப் பதக்கம் வழங்கி வாழ்த்து பொறியியல், மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு துறை பட்டதாரிகளுக்குப் பட்டங்களை வழங்கிய பல்கலைக்கழக நிர்வாகம் திருவேற்காடு அருகே வேலப்பன்சாவடியில் நடைபெற்ற டாக்டர் எம்.ஜி.ஆர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் 36-வது பட்டமளிப்பு விழாவில் 4,200 மாணவ, மாணவிகளுக்குப் பட்டங்கள் வழங்கப்பட்டன.

சென்னை, வேலப்பன்சாவடியில் உள்ள ஏ.சி. எஸ் மருத்துவமனை கன்வென்ஷன் அரங்கில் டாக்டர் எம்.ஜி.ஆர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவன பல்கலைக்கழகத்தின் 36-வது பட்டமளிப்பு விழா வெகுவிமரிசையாக நடைபெற்றது. இப்பட்டமளிப்பு விழாவில் தமிழ்நாடு மற்றும் கேரள ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் தலைமை விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். மேலும், பல்வேறு துறைகளில் முதலிடம் பிடித்த இளநிலை மற்றும் முதுநிலை பட்டதாரி மாணவ, மாணவிகளுக்குப் பதக்கங்களையும் பட்டங்களையும் வழங்கிச் சிறப்பித்தார். இத்தேர்வில் வெற்றி பெற்ற இளநிலை, முதுநிலை மற்றும் முனைவர் பட்டம் பயின்ற 4,200 மாணவ, மாணவிகளுக்குப் பட்டங்கள் வழங்கப்பட்டது, பல்கலைக்கழக வேந்தர் ஏ.சி. சண்முகம் சிறப்புரையாற்ற, தலைவர் எர். ஏ.சி.எஸ். அருண் குமார் சிறப்பு விருந்தினரைக் கௌரவித்தார். இந்நிகழ்ச்சியில் பல்கலைக்கழக அதிகாரிகள், பேராசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் திரளாகக் கலந்துகொண்டனர்.

# தொழில்முனைவோரை உருவாக்கும் வகையில் தாகூர் கல்லூரியில் மாணவர்களின் உணவு கண்காட்சி



குரோம்பேட்டை, அக்.03–

செங்கல்பட்டு மாவட்டம் குரோம்பேட்டை தாகூர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், மாணவர்களிடையே தொழில்முனைவோர் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மெகா எக்ஸ்போ கண்காட்சி மற்றும் விற்பனை நிகழ்ச்சி கல்லூரி வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இந்த கண்காட்சியில் கல்லூரி மாணவர்கள் தங்களது வீடுகளில் தயாரித்த பல்வேறு பொருட்களை கல்லூரி வளாகத்தில் அரங்குகள் அமைத்து கண்காட்சிப்படுத்தி, அவற்றை நேரடியாக விற்பனை செய்தனர்.

மாணவர்களின் கண்காட்சி மற்றும் விற்பனையை தாகூர் கல்விக் குழுமத் தலைவர் டாக்டர் மாலா மற்றும் செயலாளர் மணிகண்டன் ஆகியோர் தொடங்கி வைத்து, அரங்குகளை பார்வையிட்டு மாணவர்களை பாராட்டினர்.

இந்த மெகா எக்ஸ்போவில் 200–க்கும் மேற்பட்ட அரங்குகளை மாணவர்கள் அமைத்திருந்தனர். குறிப்பாக, பல்வேறு வகையான உணவுப் பொருட்கள் இடம்பெற்றிருந்தன. மாணவர்களே தயாரித்த உணவுகளை நேரடியாக விற்பனை செய்து தங்களது தொழில்முனைவோர் திறனை வெளிப்படுத்தினர்.

உணவுப் பொருட்கள் மட்டுமின்றி, அழகுசாதனப் பொருட்கள், கைவினைப் பொருட்கள், மேக்கப் பொருட்கள், மெகந்தி மற்றும் விளையாட்டுப் போட்டிகள் உள்ளிட்ட பல்வேறு அரங்குகளும் இடம்பெற்றிருந்தன. இதனால் கல்லூரி வளாகமே திருவிழா போல் காட்சியளித்தது.

நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட முன்னாள் மாணவர்கள் கார்த்திக் மற்றும் தினேஷ் ஆகியோர் கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டு, மாணவர்களின் முயற்சிகளை பாராட்டி வாழ்த்தினர்.

மாணவர்களிடம் தொழில்முனைவோர் சிந்தனையை வளர்த்து, அவர்கள் எதிர்காலத்தில் தொழில் தொடங்குவதற்கான ஆர்வத்தையும் திறனையும் உருவாக்கும் நோக்கில், இந்த மெகா எக்ஸ்போ நிகழ்ச்சியை தாகூர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் புருசோத்தமன் ஏற்பாடு செய்திருந்தார்.




# வாணியம்பாடியில் போலி டாக்டர் கைது



திருப்பத்தூர், அக்.03–

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி நியூடவுன் பைபாஸ் சாலையில் உள்ள கவின் மருத்துவமனையில், போலி சான்றிதழ்களை சமர்ப்பித்து மருத்துவராக பணியாற்றிய புதுச்சேரியைச் சேர்ந்த 30 வயது பிரவீன்குமார் என்பவரை நகர போலீசார் கைது செய்தனர்.

பிரவீன்குமார் சிறுநீரக நிபுணர் எனக்கூறி மருத்துவமனையில் பணியாற்றி வந்ததாகவும், அவரது சிகிச்சை முறையில் சந்தேகம் ஏற்பட்டதை தொடர்ந்து மருத்துவமனை நிர்வாகம் சான்றிதழ்கள் குறித்து ஆய்வு செய்தனர்.

அப்போது அவர் டிப்ளமோ டயாலிசிஸ் மட்டும் படித்துவிட்டு, எம்பிபிஎஸ் மற்றும் சிறுநீரக நிபுணர் தொடர்பான போலி சான்றிதழ்களை சமர்ப்பித்து பணியில் சேர்ந்தது தெரிய வந்தது.

இது தொடர்பாக வாணியம்பாடி அரசு மருத்துவமனை தலைமை மருத்துவர் சிவகுமார் அளித்த புகாரின் பேரில் வாணியம்பாடி நகர போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். விசாரணையின் அடிப்படையில் பிரவீன்குமாரை போலீசார் கைது செய்தனர். இதனிடையே, கைது செய்யப்பட்ட பிரவீன்குமார் போலீசில் அளித்துள்ள புகாரில், போலி சான்றிதழ் விவகாரம் தெரியவந்த பின்னர் மருத்துவமனையிலேயே தன்னை இரண்டு நாட்கள் கட்டி வைத்து சரமாரியாக தாக்கியதாகவும், இதில் பல்வேறு இடங்களில் காயம் ஏற்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும், தனது தாயார் கவிதாவை தொடர்பு கொண்டு, இரண்டு மாதங்கள் பணியாற்றியதற்கான சம்பளத்துடன் மேலும் ரூ.10 லட்சம் வழங்கினால் மட்டுமே தங்களது மகனை அனுப்புவோம் என மருத்துவமனை நிர்வாகம் தரப்பில் கூறியதாகவும் அவர் புகாரில் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து தனது தாயார் அளித்த தகவலின் பேரில் போலீசார் மருத்துவமனைக்கு வந்து தன்னை மீட்டதாகவும், தன்னை தாக்கியதாக கூறப்படும் மருத்துவமனை நிர்வாகி கமல் ராவ், சென்னாம்பேட்டை பகுதியைச் சேர்ந்த தபரேஸ் மற்றும் ரஜினி, சூர்யா ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பிரவீன்குமார் புகார் அளித்துள்ளார்.

இந்த புகாரின் பேரில் நகர போலீசார் 4 பேர் மீது வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# ‘பொருளாதாரம் முதல் சட்டம் ஒழுங்கு வரை எல்லாவற்றிலும் தமிழகம் வீழ்ச்சி’: ஸ்டாலின்

சென்னை, அக்.03–

“பொருளாதாரம், விலைவாசி, மின்சாரம், தொழில்துறை, சட்டம் ஒழுங்கு, மருத்துவம், பா ல்வளம் என எல்லா வற்றிலும் தமிழகம் வீழ்ச்சியை நோக்கி வேகமாகச் சென்றுகொண்டிருக்கிறது. ரீல்ஸ் பார்த்தால் மக்களின் வயிறு நிறையுமா?” என திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், “எம்எல்ஏ ஷாப்பிங்கில் மும்முரமாக இருக்கும் முதல்வருக்கும், மக்கள் மளிகைக் கடையில் கூட ஷாப்பிங் செய்ய முடியாமல் கஷ்டத்தில் தவிப்பது தெரியுமா? தாராபுரத்தில் பரப்புரைக்கு இடையே மளிகைக் கடை ஒன்றில் விலைவாசி உயர்வு குறித்து கேட்டேன். 4 மாதம் முன்பிருந்த விலையில் இருந்து அத்தியாவசியப் பொருட்களின் விலை பெருமளவுக்கு உயர்ந்துள்ளது. அன்றாடச் சமையலு க்கே வீடுகள் விழிபிதுங்கி நிற்கின்றன. ரீல்ஸ் பார்த்தால் மக்களின் வயிறு நிறையுமா? இந்தியா முழுவதும் பொருளாதார வளர்ச்சி இறங்குமுகத்தில் இருந்தபோது கூட, திடாவிட மாடல் ஆட்சியில் தமிழகம் ஏறுமுகத்தில் இருந்தது. ஆனால் இன்றைய நிலை என்ன?

இந்தியா முழுவதும் ஜிஎஸ்டி வருவாய் உயர்ந்த நிலையில் கூட, கடந்த மூன்று மாதங்களாகத் தமிழ்நாடு சரிவைச் சந்தித்து வருகிறது. இந்த ஆட்சி வேலைக்கு ஆகாத வேஸ்ட் ஆட்சி என முடிவெடுத்து, தமிழக அரசின் முதலீட்டு ஊக்குவிப்பு முகமையான Guidance TN-இல் இருந்தும் அனுபவமிக்க வல்லுநர்கள் வேறு மாநிலங்களுக்குச் செல்வதாகச் செய்திகள் வருகின்றன. பொருளாதாரம், விலைவாசி, மின்சாரம், தொழில்துறை, சட்டம் ஒழுங்கு, மருத்துவம், பால்வளம் என எல்லா வற்றிலும் தமிழகம் வீழ்ச்சியை நோக்கி வேகமாகச் சென்றுகொண்டிருக்கிறது.

இவற்றில் கவனம் செலுத்தா மல், விளக்கு மாத்துக்குப் பட்டுக் குஞ்சம் என்பது போல எல்லா வற்றிலும் ‘வெற்றி’ என ஸ்டிக்கர் ஒட்டினால் போதும் என நினைக்கும் அரசிடம் மாட்டிக்கொண்டு மக்கள் தவிக்கின்றனர்” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# கிருஷ்ணகிரியில் தமிழ் சங்கம் தொடக்கம்: “தமிழின் பெருமையை இளைய தலைமுறையினருக்கு எடுத்துச் செல்ல வேண்டும்” கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்



கிருஷ்ணகிரி: அக்.03

கிருஷ்ணகிரியில் புதிதாக தொடங்கப்பட்டுள்ள கிருஷ்ணகிரி தமிழ் சங்கத்தின் தொடக்க விழா சிறப்பாக நடைபெற்றது. விழாவில் இலக்கியம் மற்றும் ஆன்மீகச் சொற்பொழிவாளர் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் கலந்து கொண்டு, தமிழ் சங்கத்தின் பெயர் பலகையை திறந்து வைத்து சங்கத்தை தொடங்கி வைத்தார்.

விழாவிற்கு கிருஷ்ணகிரி தமிழ் சங்கத்தின் நிறுவனர் மற்றும் தலைவர் முனைவர் வை. அச்சுதன் தலைமை வகித்தார். தொடக்க நிகழ்வாக தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டது. தொடர்ந்து வரவேற்புரையை திரு. லட்சுமி நாராயணன் வழங்கினார். நிகழ்ச்சியை கவிஞரும் எழுத்தாளருமான முனைவர் திருமதி சாந்தி தொகுத்து வழங்கினார்.

தொடக்க விழாவில் பேசிய கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் கூறியதாவது:

“தமிழ் இனம் பெருமைமிக்க இனம். நமது மூதாதையர்கள் சொல்லில் அடங்காத இலக்கியச் செல்வங்களை நமக்கு விட்டுச் சென்றுள்ளனர். ஆனால், அந்த இலக்கியப் பெருமையையும் தமிழின் தொன்மையையும் இன்றைய இளைய தலைமுறையினர் முழுமையாக உணரவில்லை. அவர்களுக்கு நமது மொழி, பண்பாடு, கலாச்சாரம் மற்றும் இலக்கிய வளத்தின் சிறப்பை எடுத்துச் சொல்ல வேண்டியது நமது கடமை. அதற்காகவே இந்த தமிழ் சங்கம் உருவாக்கப்பட்டுள்ளது” என்றார்.

மேலும், சுதந்திரம் பெற்ற பின்னரும் ஆங்கில மோகம் மற்றும் நாகரிகத்தின் தாக்கம் நமது வாழ்க்கை முறையிலும் சிந்தனையிலும் தொடர்ந்து இருந்து வருவதாகக் குறிப்பிட்ட அவர், “இதற்குக் காரணம் நமது பிள்ளைகளுக்கு நமது மொழி மற்றும் பண்பாட்டின் சிறப்பை நாம் போதிக்கத் தவறியதே. இது நமது குற்றமாகும். அடுத்த தலைமுறையினருக்கு நமது பாரம்பரியத்தையும் இலக்கிய வளத்தையும் எடுத்துச் செல்ல வேண்டும்” என்று வலியுறுத்தினார்.

“ஒரு தமிழ் சங்கத்தை அமைப்பது நூறு கோயில்களைக் கட்டுவதற்கு சமம்” எனக் குறிப்பிட்ட இலங்கை ஜெயராஜ், தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் பாதுகாப்பிற்கும் தமிழ் சங்கங்கள் ஆற்ற வேண்டிய பங்கு மிக முக்கியமானது என்றார்.

திருக்குறளை ஒவ்வொருவரின் கைகளிலும் கொண்டு செல்ல வேண்டும்

தமிழ் இலக்கியத்தின் சிறப்பை எடுத்துரைத்த அவர், பேச்சாளர்கள் பலரும் தங்களது உரைகளில் வெளிநாட்டு அறிஞர்களை மேற்கோள் காட்டிப் பேசுவதாகவும், அதே நேரத்தில் உலகப் பொதுமறையாகப் போற்றப்படும் திருக்குறளை நாம் இன்னும் அதிகமாக இளைய தலைமுறையிடம் கொண்டு செல்ல வேண்டும் என்றும் தெரிவித்தார்.

“திருவள்ளுவரைப் போன்ற தெய்வப் புலவர் உலகில் உண்டா? திருக்குறளில் இடம்பெற்றுள்ள கருத்துகள் உலகளாவிய மனித வாழ்க்கைக்கு பொருந்தக்கூடியவை. நமது பல்வேறு கேள்விகளுக்கும் அதில் விடைகள் உள்ளன. எனவே திருக்குறள் ஒவ்வொருவரின் கைகளிலும் இருக்க வேண்டும்” என்று அவர் வலியுறுத்தினார்.

இன்றைய இளைய தலைமுறையினர் தமிழைச் சரியாக உச்சரிப்பதிலும், பிழையின்றி எழுதுவதிலும் சிரமங்களை எதிர்கொள்வதாகக் குறிப்பிட்ட அவர், பேச்சின்போது தேவையற்ற அளவில் ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்தும் பழக்கமும் அதிகரித்துள்ளதாகத் தெரிவித்தார்.

“தமிழைச் சரியாகப் பேசவும், எழுதவும், உச்சரிக்கவும் இளைய தலைமுறையினருக்கு கற்றுக்கொடுக்க வேண்டும். தமிழின் தொன்மை, தனித்தன்மை மற்றும் மேன்மையை அவர்களுக்கு உணர்த்த வேண்டும் என்பதே இந்த தமிழ் சங்கத்தின் முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும்” என்றார்.

தமிழ் எழுத்தின் சிறப்பை விளக்கிய இலங்கை ஜெயராஜ்

தமிழ் எழுத்துகளின் சிறப்பையும் அவர் விளக்கினார். எந்த மொழியைச் சேர்ந்தவராக இருந்தாலும் வாயை மூடி பின்னர் வாயைத் திறந்து உச்சரிக்கும்போது இயல்பாக வெளிப்படும் ஒலி ‘அ’ என்ற எழுத்தாகும் என்றும், தமிழ் மொழியின் எழுத்து அமைப்பில் ‘அ’ முதலெழுத்தாக இடம்பெற்றிருப்பதன் சிறப்பையும் எடுத்துரைத்தார்.

மேலும், தமிழ் மொழியில் உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய்யெழுத்து ஆகியவற்றின் அமைப்பு எவ்வாறு உருவாக்கப்பட்டுள்ளது என்பதையும் விளக்கி, தமிழ் மொழியின் எழுத்து வடிவமைப்பின் தனித்துவத்தை சிறப்பாக எடுத்துரைத்தார்.

“தமிழ் இலக்கியங்களை ஒரு பிறவியில் படித்து முடிக்க முடியாது”

விழாவிற்கு தலைமை வகித்த கிருஷ்ணகிரி தமிழ் சங்கத்தின் நிறுவனர் மற்றும் தலைவர் முனைவர் வை. அச்சுதன், தமிழ் இலக்கியங்களின் பரந்துபட்ட தன்மையை எடுத்துரைத்தார்.

“தமிழ் இலக்கியங்கள் மிகவும் விரிவானவை. அவற்றை ஒரு பிறவியில் முழுமையாகப் படித்து முடித்து விட முடியாது. அவ்வளவு செழுமையான இலக்கிய வளத்தை தமிழ் மொழி கொண்டுள்ளது. அந்த இலக்கியச் செல்வங்களை இளைய தலைமுறையினரிடம் கொண்டு செல்வதே தமிழ் சங்கத்தின் முக்கியப் பணியாக இருக்கும்” என்று அவர் தெரிவித்தார்.

விழாவில் தமிழ் மொழி, இலக்கியம் மற்றும் பண்பாட்டின் வளர்ச்சிக்காக பல்வேறு நிகழ்ச்சிகள் மற்றும் செயல்பாடுகளை முன்னெடுப்பது தொடர்பாகவும் கருத்துகள் பரிமாறப்பட்டன.

விழா இறுதியில் ஆசிரியர் ஜெயக்கொடி நன்றியுரை ஆற்றினார்.

நிகழ்ச்சியில் தமிழ் சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள், இலக்கிய ஆர்வலர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். தொடக்க விழா தமிழ் மொழி மற்றும் இலக்கியத்தின் பெருமையை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் வகையில் அமைந்தது.



■ ஜப்பானில் நடைபெற்று வரும் 20–வது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்று தாயகம் திரும்பிய தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரர், வீராங்கனைகள் வித்யா ராம்ராஜ் (Athletics), கமலினி (Cricket), பாரணிகா இளங்கோவன் (Athletics), அபிநயா ராஜராஜன் (Athletics), விஷால் தென்னரசு கயல்விழி (Athletics), ஹரிஹரன் (Badminton) ஆகியோருக்கு சென்னை விமான நிலையத்தில் தமிழக அரசின் சார்பில் மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் மரிய வில்சன் பொன்னாடை போர்த்தி, மாலை அணிவித்து சிறப்பான வரவேற்பு அளித்தார். இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு செயலாளர் சந்தீப் நந்தூரி தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, இ.ஆ.ப., இணை முதன்மை செயல் அலுவலர் மயில்வாகனன்,இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் மருத்துவர் ரெ.சுமன், பொது மேலாளர் எல்.சுஜாதா மற்றும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் விடுதி வீரர், வீராங்கனைகள், மாணவ, மாணவியர்கள், பயிற்றுநர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பங்கேற்றனர்.




# ஆந்திராவில் உள்ளாட்சி இடஒதுக்கீடு 50% தாண்டக் கூடாது: உயர் நீதிமன்றம்

விஜயவாடா, அக்.03–

ஆந்திராவில் நடைபெற உள்ள உள்ளாட்சி தேர்தலில் மொத்த இடஒதுக்கீடு 50 சதவீதத்தை தாண்டக் கூடாது என மாநில அரசுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஆந்திராவில் விரைவில் உள்ளாட்சி தேர்தல்கள் நடைபெற உள்ளது. கிராம பஞ்சாயத்து, நகராட்சி, மாநகராட்சி தலைவர்கள் மற்றும் மேயர்களுக்கான தேர்தல் நடத்தப்பட உள்ளது.

இதையொட்டி பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு (பிசி) இந்த தேர்தலில் 34 சதவீத இட ஒதுக்கீடு வழங்கப்படும் என முதல்வர் சந்திரபாபு நாயுடு ஏற்கனவே அறிவித்தார்.

இதற்கு அமைச்சரவை, சட்டப்பேரவை மற்றும் மேலவைகளில் ஒப்புதல் பெறப்பட்டு 2 அரசாணைகளையும் அரசு வெளியிட்டது. தற்போது இந்த இரண்டு அரசாணைகளையும் உயர்நீதிமன்றம் ரத்து செய்துள்ளது. மேலும், உள்ளாட்சி தேர்தலில் மொத்த இடஒதுக்கீடு 50 சதவீதத்தை தாண்டக் கூடாது எனவும், 6 வாரங்களுக்குள் தேர்தல் பணிகளை அறிவிக்குமாறும் மாநில அரசுக்கும் தேர்தல் ஆணையத்துக்கும் உத்தரவிட்டது. எஸ்ஐஆர் பணிகள் முடிந்து முழு வாக்காளர் பட்டியல் வந்த பிறகே தேர்தலை அறிவிக்க வேண்டும் என்று ஒய்.எஸ். ஆர். காங்கிரஸ் தொடர்ந்த வழக்கையும், வார்டுகளை மறுசீரமைத்த பிறகே தேர்தல் நடத்த வேண்டும் என்ற மனுவையும் உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.



# காரைக்கால் திருமலைராயன்பட்டினம் காந்தி பூங்காவில் முதல் முறையாக காந்தி ஜெயந்தி விழா

காரைக்கால், அக்.03–

காரைக்கால் மாவட்டம் திருமலைராயன்பட்டினம் காந்தி பூங்காவில் முதல் முறையாக காந்தி ஜெயந்தி விழா இன்று நடைபெற்றது.

மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் ஆண்டு தோறும் காரைக்கால் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் காந்தி ஜெயந்தி விழா நடத்தப்படுவது வழக்கம். இந்நிலையில் மாவட்டத்தில் திருமலைராய ன்பட்டினத்தில் அமைந்துள்ள காந்தி பூங்காவில் மட்டுமே மகாத்மா காந்தியின் முழு உருவச் சிலை நிறுவப்பட்டுள்ளதால், இங்கு காந்தி ஜெயந்தி விழாவை நடத்துவதே பொருத்தமாக இருக்கும் என நிரவி திருப்பட்டினம் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் டி.கே.எஸ்.எம். மீனாட்சி சுந்தரம் மாவட்ட நிர்வாகத்துக்கு கடிதம் எழுதியிருந்தார்.

இதையடுத்து மாவட்ட ஆட்சியரின் அனுமதியின்பேரில், இன்று திருமலைராயன்பட்டினம் காந்தி பூங்காவில் காந்தி ஜெயந்தி விழா நடைபெற்றது. விழாவில், அலங்கரிக்கப்பட்டிருந்த காந்தி சிலைக்கு சட்டப்பேரவை உறுப்பினர் டிகேஎஸ்எம் மீனாட்சி சுந்தரம் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து மாவட்ட முதுநிலை காவல் கண்காணிப்பாளர் வினய் குமார் காட்கே, துணை ஆட்சியர் பாலு என்கிற பக்கிரிசாமி, வட்டார வளர்ச்சி அதிகாரி கு.அருண கிரிநாதன், செய்தி மற்றும் விளம்பரத் துறை உதவி இயக்குநர் பாலாஜி உள்ளிட்ட அரசுத்துறை அதிகாரிகள், சுதந்திரப் போராட்ட தியாகிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டு காந்தி சிலைக்கு மரியாதை செலுத்தினர்.

காந்தியின் போதனைகள், சிந்தனைகள், அறவழியிலான செயல்பாடுகள், சமூகத்துக்கான பங்களிப்பு உள்ளிட்டவை குறித்து நிகழ்ச்சியில் பேசப்பட்டது. மும்மத கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்றது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161